தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சஎ	திருவள்ளுவர் யாண்டு உ௲௪ பிரமாதீச, ஐப்பசி (1973 — அக்டோபர் — நவம்பர்)	மலர் எ

சென்ற இதழின் தொடர்ச்சி

சிறுபாணாற்றுப் படையில் – உவமைச் சிறப்பு

மு. வை. அரவிந்தன், எம் ஓ. எல்.,

தமிழ்த் துணைப் பேராசிரியர், அரசினர் கலைக் கல்லூரி,

வேலூர், வடஆர்க்காடு மாவட்டம்.

உருவகம்

வானத்திலிருந்து உலகத்தைக் காண்பது பேரின்பம் தரும் காட்சியாகும். கற்பனைச் சிறகு கொண்டு பறந்து, இலக்கிய வானத்தில் நின்று நத்தத்தனர் இவ்வுலகத்தைக் காண்கின்ருர்; நிலம், மலை, ஆறு, காடு — ஆகியவற்றை நோக்குகின்ருர் அக்காட்சி விழுமிய உணர்ச்சியூட்டி அழகுக் கவிதையாய்க் கருக்கொள்கின்றது.

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்
செல்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழில் குயில்குடைந்து உதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடை நெறித்துக்
கதுப்பு விரித்தன்ன காழக நுணங்கறல் (1—6)

என்பதே அக் கவிதை.

மாநில மடந்தைக்கு மூங்கிலே தோள்; மலையே மார்பு. அவள் மார்பில் கிடந்து அசையும் (முத்து) மாலை போலக்

கானுறு விளங்குகின்றது கானுற்றங் கரையில் உள்ள பூம் பொழிலில், குயில்கள் கோதி உதிர்த்த நறுமலர்களை, நில மடந்தை சூடி, நெறிப்புள்ள கூந்தலை விரித்தாற்போலக் கரிய நுண்ணிய அறல் கானுற்றில் விளங்குகின்றது. — இவ்வாறு நிலமடந்தையை உருவகம் செய்து மகிழ்கின்றார் நத்தத்தனார்.

குறிப்பு உருவகம்

உவமை கொள்ளும் பல வேறு வடிவங்களில் உருவகமும் ஒன்று. உருவகம் தன் வடிவத்தில் சுருங்கி ஒரு பொருள் (ஏகதேச) உருவகம் ஆகின்றது. ஒரு பொருள் உருவகமும் குறுகிக் குறுகி இரண்டொரு சொற்களில் மட்டும் தன் வடிவத் தைக் காட்டி நிற்பதுண்டு அதனைப் பரிமேலழகர் குறிப்பு உருவகம் என்று கூறுகின்றார் (குறள்: 1030).

சிறுபாணாற்றுப் படையில் கணக்கற்ற குறிப்பு உருவகங்கள் இடம் பெற்றுள்ளன. நுணுகி ஆராய்ந்து, குறிப்பு உருவகத் தில் மறைந்து கிடக்கும் உவமையின் முழு வடிவத்தைக் காணும் போது பேரின்பம் உண்டாகிறது

பிடிக்கணம் சிதறும் பெயல் மழைத் தடக்கை (124) என்ற அடியில், நல்லியக்கோடனின் வள்ளன்மையைச் சிறப்பிக்கின்றார் புலவர். கைம்மாறு கருதாது உலகத்திற்கு மழையைப் பொழியும் முகிலைப்போல, நல்லியக்கோடனின் தடக்கை பிடிக் கணத்தை இரவலர்க்கு வழங்குகின்றது என்ற கருத்தைப் புலவர் ஒரே அடியில் வைத்து விளக்கியுள்ளார். சிதறும், பெயல்மழை என்ற சொற்களில் சிறந்த கருத்துப் பொதிந்துள்ளது. மழை முகில் தடக்கைக்கும்: உலகம் இரவலர்க்கும்: மழைநீர் பிடிக்கணத்திற்கும் உவமைகளாகி உருத் தெரியாமல் மறைந்து நிற்கின்றன.

சங்க காலத்தில் நான்கு குதிரைகள் பூட்டிய தேர் இருந்தது (பெரும்: 488, 9) என்பதைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன. பழந் தமிழ் நாட்டில் வாழ்ந்த நத்தத்தனார், பல குதிரைகள் பூட்டிய தேர் ஒன்றைக் கற்பனை செய்து பார்க்கின்றார்.

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம் ... .
ஒருதான் தாங்கிய உரனுடைய நோன்தாள்
.... நல்லியக் கோடன் (113. 5)

என்று நல்லியக் கோடனைப் புகழும்போது. புலவர் செய்த கற்பனை வெளிப்படுகின்றது மேலே காட்டிய அடிகளில் சிறந்த உவமை ஒன்று மறைந்திருக்கின்றது. பூண்ட, நுகம், தாங்கிய- என்ற மூன்று சொற்களும் அவ் வுவமையை வெளிப்படுத்துகின்றன.

ஈகையாகிய தேரைப் பேகன், பாரி முதலிய வள்ளல்கள் எழுவரும் சேர்ந்து இழுத்தனர். அவர்கள் மாய்ந்தபின் அந்தத் தேர் ஓய்ந்து கிடக்கின்றது. தேரின் நிலையை, உணர்ந்த நல்லியக்கோடன்தான் ஒருவனுகவே இருந்து, ஈகைத் தேரின் செந்நுகத்தைத் தாங்கி வலிமையோடு முயன்று இழுக்கின்ருன். இவ்வாறு பல சொற்களால் கூற வேண்டிய கருத்தை மூன்று சொற்களில் மட்டும் பொதிந்து வைத்துள்ளார் நத்தத்தனர்.

மக்களிடையே போட்டி, பிணக்கு, வெற்றி தோல்வி — ஆகியவற்றைக் கண்ட நத்தத்தனர் அவற்றை அஃறிணை உயிர்களிடமும், உயிரற்ற பொருள்களிடமும் வைத்து இன்புறுகின்ருர். தம் புலமை மாண்பினல் எளிய பொருள்களும் உணர்வும் அறிவும் பெற்றுப் போராடி வெற்றி தோல்விகளை அடைவதாய்ப் படைத்து மொழிகின்ருர்

அல்லி மலர்கள், ஞாயிற்றின் சுடுவெங்கதிர்களுக்கு அஞ்சி மலர்ச்சியின்றி இருக்கின்றன ; தம் பகைவன் வலிகுன்றி ஓயும் நிலையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றன ஞாயிறு மெல்ல மெல்ல மேற்கே சென்று மலையில் மூழ்குகின்றது. அதன் சுடு வெங் கதிர்களும் மறைகின்றன. தமக்கு ஏற்ற மாலைக் காலம் வந்ததைக் கண்டு அல்லி மலர்கள் மலர்கின்றன : தம் பகைவன் மறைந்து விட்டதால் மகிழ்கின்றன. இக் கருத்துக்கள் யாவும் அடங்க,

... .. வியன்மலை மூழ்கிச்
சுடர்கால் மாறிய செவ்வி நோக்கி
... ... பூத்த கேணி (170—72).

என்று நத்தத்தனர் பாடுகின்ருர்.

சேர மன்னன் குட்டுவனின் தோளைக் 'கணைய மரத்தோடு மாறுபடும் திண்ணிய தோள்' (49) என்றும்; நுளை மகளின் மாசற்ற முகத்தை, மாசுடைய திங்கள் கண்டு, 'இம் முகத்தின்

அழகை நாம் பெறவில்லையே ;' —என்று ஏங்குவதற்குக் காரண மான மாசில் திருமுகம் (157) என்றும் நத்தத்தனர் கூறுவது மிகவும் சுவையாய் உள்ளது.

நல்லியக்கோடன் பளபளப்பான பொற்கலத்தில் பாணரை உண்ணச் செய்கின்றன். பொற்கலத்தைச் சுற்றிச் சிறிதும் பெரிதுமான தட்டும் கிண்ணமும் காய்கறியோடு விளங்கு கின்றன. பொற்கலமும், அதனைச் சுற்றியுள்ள தட்டும் கிண்ண மும் பொலியும் இன்பக் காட்சி கவிஞரின் உள்ளத்தைக் கிளறு கின்றது. அக் கிளர்ச்சியால்,

> வாள்நிற விசும்பில் கோள்மீன் சூழ்ந்த
> இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
> விளங்குபொற் கலம் (242—4)

என்ற கவிதை பிறக்கின்றது. 'எள்ளும்' என்ற சொல், செறிந்த கருத்தோடு விளங்குகின்றது கோள்மீன்கள் பலவற்றால் சூழப் பட்ட இளங்கதிர்களையுடைய ஞாயிற்றை, சிறிய தட்டும் கிண்ண மும் சூழ இருக்கும் பொற்கலம் எள்ளி நகைக்கின்றதாம், மெலியாரைக் கண்டு வலியார் எள்ளி நகைப்பது போல!

அஃறிணைப் பொருள்கள் போரிட்டு வெற்றி தோல்விகளை அடைவதாய்ப் பாடுவதில், நத்தத்தனர் மிகுந்த ஆர்வம் காட்டு கின்றார் இரும்புப் பூண் கட்டிய உலக்கை கொண்டு குத்தி எடுத்த அரிசி, அந்தப் பூணின் முகத்தைத் தேய்த்து விட்ட தாகக் கூறுகின்றார் (193, 4). இடி. நெடிய மலையுடன் போரிட்டு, அதன் தலையை இடித்துச் சென்றதாக உரைக்கின்றார் (266). ஆற்றில் பெருகி வரும் நீர் கரையோடு போரிடுகிறது — என்ற கருத்தைப் 'பொருபுனல்' (118) என்ற சிறு தொடரால் வெளிப்படுத்துகின்றார். கானாற்றில் விரைந்து வரும் புது வெள்ளம், கரையைக் கொன்று கானாற்றையும் துன்புறுத்து கின்றது என்ற கருத்து,

> 'செல்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்றுக்
> கொல்கரை' (3, 4)

என்ற அடியில் அமைந்துள்ளது. நுணவ மரக் கட்டையால், உளி கொண்டு செய்த நெட்டி மாலையை,

> .... நுணவத்து
> அறைவாய்க் குறுந்துணி அயில் உளிபொருத
> .... செய் பூங்கண்ணி (5)

என்று சுவைபடக் கூறுகின்றார். நுணவ மரக் குறுங்கட்டையுடன், உளி போரிட்டதாகவே கூறுகின்றார். இன்னோரிடத்தில், மரக்கட்டையோடு கூர்உளி போரிட்டு, வடுவை உண்டாக்கியுள்ளதாகவும், அந்த வடு மரக் கட்டையின் உடம்பில் என்றும் வாழ்வதாகவும் பாடுகின்றார்:

> கூர்உளி பொருத வடுவாழ் நோன்குறடு (252,. 1)

என்ற அடியில் அக் கருத்து உள்ளது.

நத்தத்தனர் பாட்டில், இன்னும் பலவேறு வகையான குறிப்பு உருவகங்கள் இடம் பெற்றுள்ளன அவற்றை இங்கே காண்போம்.

சங்க கால மக்கள். ஊர்ப் புறங்களில் இருந்த மந்தை வெளியில், ஆனிரைகள் தினவு போகத் தேய்த்துக்கொள்ள மரக்கட்டைகளை நட்டு வைத்தனர். அம் மரம், 'ஆதீண்டுகுற்றி' எனப்பட்டது. ஆதீண்டு குற்றியையும் அதன்மீது ஆக்கள் உராய்வதையும் கண்ட நத்தத்தனர்,

> உருமுச் சுவல் சொறியும் தூங்கு எயில் (80, 1)

என்று பாடுகின்றார். ஓங்கி உயர்ந்த மதிலின் உச்சியில், இடியேறு தன் கழுத்தைத் தினவு போகத் தேய்த்துக் கொள்ளுகின்றதாம்:

யானையைக் குன்றுக்கும் மதநீரை அருவிக்கும் உவமை சொல்லிப் பழகிய புலவர் மரபில் வந்த நத்தத்தனர் யானையின் மதநீரை 'யானை அருவி' (200) என்று சுருக்கமாகச் கூறுகின்றார்; யானையைக் குன்று என்றும், மதநீரை அருவி என்றும் சொல்லாமல் சொல்லுகின்றார்.

ஔவை உண்ட நெல்லிக் கனியை அமிழ்து விளை தீங்கனி (101) என்று நத்தத்தனர் புகழ்கின்றார். நெல்லிக் கனியில் அமிழ்தம் விளைந்ததாம், வயலில் நெல் விளைவதுபோல!

வளிதுஞ்சு நெடுங் கோடு (106) என்றும், வேனில் நின்ற வெம்பத வழிநாள் (9) என்றும், துனிகூர் எவ்வமொடு துயர் ஆற்றுப் படுப்ப (39) என்றும் நத்தத்தனுர் கூறும் பகுதிகள் சுவையானவை. காற்று உறங்குவதாயும், வேனில் நிலைபெற்றுத் தங்கி இருப்பதாயும், துன்பம் (பாணர்களை வள்ளலிடம்) செலுத்துவதாயும் பாடியுள்ள முறை சிறப்பாக உள்ளது.

'வாய்ப்புறம் இரண்டும் பொருந்த மூடிய இரு கிளிஞ்சில்களின் உள்ளே முத்தைப் போட்டு' — என்ற கருத்தை 'முத்தம், எருந்தின் வயிற்று அகத்து அடக்கி (58)' என்று நத்தத்தனுர் கூறுகின்ருர். கிளிஞ்சிலுக்கு வயிறு இருக்கின்றதாம்! உள்ளே குழிந்து, வெளிப்புறம் அகன்று, மேடாய்ப் பருத்து இருக்கும் பகுதியை வயிறு என்று கூறுவது பொருத்தம் தானே!

வேற்படையை 'அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல் (94)' என்று புலவர் கூறுகின்ருர். வேல், தன் கண்களை இமைக்கின்றதாம்: அதன் கண்களில் தீ விளங்குகின்றதாம்; போர் மறவன் சினந்து விழித்த கண்களில் தீப் பொறியைக் கண்ட புலவர், பகைவரை மாய்க்கும் வேலும் அம் மறவனைப் போலவே இருப்பதாய்ப் பாடுகின்ருர். மற்ருேரிடத்தில் கொடிய இனம் மூண்டு எரியும் ஒளிதிகழும் நெடியவேல் (உரவுச் சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல் — 102) என்று இன்னும் சற்று விளக்கமாகவே பாடுகின்ருர் நத்தத்தனுர்.

இலக்கியக் கலைஞர்களின் கலைத்திறனை அறிவதற்கு, அவர்கள் கையாண்ட உவமைகள் சிறந்த அளவு கோலாய் உள்ளன. உவமைகள், புலவர்களின் புலமை மாண்பை வெளிப்படுத்துகின்றன; அவர்கள் கண்ட காட்சியைத் தெளிவாக விளக்குகின்றன; அவர்கள் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சி, கற்பனை, இன்பம் ஆகியவற்றைச் சுமந்து வந்து கற்போர் நெஞ்சத்தில் பொதிந்து வைக்கின்றன. இதனை மேற்கூறிய சிறுபாணுற்றுப்படை உவமைகள் நமக்கு நன்குணர்த்துகின்றன.

உ

அப்பர் தேவாரத்தில் அரிய சில சொல் வடிவங்கள்

செஞ்சொற்கொண்டல், வித்துவான்
டாக்டர். சொ சிங்காரவேலன். எம் ஏ., பிஎச். டி.
(அ வ. அ. கல்லூரி, மாயூரம்)

0. 1: கவிதை சொற்களால் ஆகியது. சொற்கள் கவிஞன் எடுத்தாளும்போது பெருஞ் சிறப்பைப் பெற்று விடுகின்றன. எல்லோர்க்கும் தெரிந்த சொற்களே சிற்சில வேளைகளில் கவிஞனின் கைவண்ணத்தால் புதுப்பொருளும் பொலிவும் பெற்று ஒளிவிடுகின்ற அற்புதத்தை இலக்கியங்களிற் காணலாம். சொல் ஒரு கருவிதான்; ஆயினும் அந்தக் கருவியை வைத்துக்கொண்டு அதனைக் கையாள வல்லவனாகிய கவிஞன் எவ்வளவோ புதிய படைப்புக்களைச் செய்கின்றான்; புதிய உலகிற்கு நம்மை அழைத்துச் செல்லுகின்றான்: அதுவே அவன் படைக்கும் பொருள் உலகம். உயர்ந்த கவிஞர்களுடைய கவிதைகளுக்கே இத்தகு மாண்பு இயல்பாகின்றது அப்பர் என்ற அருட் பெருங் கவிஞரின் சொல்வன்மையினை எண்ணுங்கால் இந்த நினைவுகள்—அனைத்தும் நம் எண்ணத்தில் எழுகின்றன.

"இலக்கியம் என்பது வாழ்வின் ஒருவகை விளக்கமே; அது சொல்லின் வழியாக இனிது விளங்குகின்றது" என்பர்.[1] அத்துடன் ஓர் ஆசிரியனின் நடையினை ஆழ்ந்து உணர்தற்கு அவனுடைய சொல்லாட்சியினை அறிதல் பெரிதும் வேண்டத்தக்கது என்பது இலக்கிய ஆராய்ச்சியாளரது முடிவும் ஆகும். "இலக்கியம் விளைக்கும் இனிய உணர்வுகள் ஒரு மனத்தினின்றும் பிறிதொரு மனத்திற்குச் சொற்கள் வழியாகவே செல்லுதலால் அவற்றைத் தனித்து ஆராயும் ஆராய்ச்சி நடை ஆராய்ச்சியின் இன்றியமையாத பகுதிகளுள் ஒன்றும்" என்பர் எடித் ரிக்கர் என்னும் அறிஞர்.[2]

0. 2: இத்தகு சிறப்புடைய சொல் ஆராய்ச்சி சில இன்றியமையாக் கூறுகளை உடையது. சொல்லின் அளவு (Word Proportion) சொல்லின் நிலை (Word length) சொற்கள் தொடர்ந்துநிற்கும் நிலை (Associational Values of Words) தொடர்நிலை சொற்கோவைப் பரப்பு (Extent of Vocabulary) தொட

ராக்கம் (Phrasing) ஆகிய கூறுகள் இதன்பால் அடங்குவன கவிஞனது சொற்கோவைப்பரப்பில் நம் சிந்தனையைத் தூண்டும் நிலைகளாகப் பலவற்றைக் கொள்ளலாம். அவற்றைக் கூர்ந்து நோக்குங்கால் அரிய சொற்கள் (rare Words) அரும் பொருள்களிற் கையாளப் பெற்ற சொற்கள் (Words used in rare senses) படைக்கப்பட்ட சொற்கள் (Coined words) இணையற்ற பொருளில் ஆளப்பட்ட சொற்கள் (Words used in a unique sense) அயல் மொழிகளினின்று கடன் வாங்கப்பட்ட சொற்கள் (Words borrowed from foreign languages) இலக்கியங்களில் முன்னர்க் கையாளப் பெறாத குறுமொழி இனஞ் சார்ந்த சொற்கள் (Slang and other words not before used in literature), வட்டாரச் சொற்கள் (dialect words and forms) ஆகிய பாகுபாடுகள் தெளியப்பெறும் [3]

1. 1: அப்பர் தேவாரத்திற்கமைந்த சொற்கோவையினை ஆழ்ந்து நோக்கினால் இப்பாகுபாடுகளுள் முதலானதாகிய 'அரிய சொற்கள்' பலவற்றை அங்குக் காணலாம். இலக்கியங்களிற் பயில வழங்கப் பெறாத அச்சொற்களை அப்பரடிகள் கையாண்டுள்ள திறம் பெரிதும் உணரத்தக்கது, 'தமிழ் மொழித் தலைவர்' என்றும் 'கோதின் மொழிக்கொற்றவனார்' என்றும் சேக்கிழாரால் பாராட்டப்பட்டவர் அடிகள் [4]. ஆதலின், அவருடைய சொல்லாட்சியும், திறனும் அறிஞர் உலகினாற் பாராட்டப் பெற்ற பழமைச் சிறப்புடையவை என்பது வெளிப்படை.

1. 2: 'அல்லகண்டம்' என்ற ஒரு சொல் அப்பர் தேவாரத்திற் காணப் பெறுகின்றது இச்சொல் வடிவம் தமிழ் உலகிற் புதியதாகக் கருதப்பெறும் நலம் உடையது. 'துன்பம்' என்ற பொருளை உடையது இச்சொல்

"அத்தா உன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய்கேனே [5].

இதனுள் வரும் 'கொண்டு' என்பது மூன்றும் வேற்றுமை ஆன்உருபின் பொருள் படுவதோர் இடைச் சொல் ஆகும். ஆகவே, 'துன்பத்தால் வருந்துதல் என் செய்யக்கடவேன், ஒன்றுமில்லை' என்பதும், 'அவை என்னை ஒன்றும் செய்யா' என்பதும் இத் தொடர்க் கருத்தாகக் கொள்ளப்படும். இச்சொல் அல்லல் கண்டம் என்பதன் ஆக்கமாகக் கொள்ள இடம் உள்ளது. 'கண்டம்' என்பது இப்போதும் துன்பத்தையே குறிப்

பதாகும். அல்லலாகிய கண்டம் என்று கொள்ளலாம். 'அல்' இருள் எனக்கொண்டு 'இருளனைய துன்பம்' என்றும் பொருள் கொள்ள இடம் உண்டு எவ்வாறேனும் அரிய சொல்வடிவம் ஆகிய இது அப்பர் தேவாரத்தில் விளங்குவது அறிந்துணரத்தக்கது.

1. 3: 'ஒப்பாரி' என்பது ஒப்புப் பொருளில் வரும் ஒரு சொல். இது திருவள்ளுவரால். தம் கயமை அதிகாரத்தில் பின்வருமாறு எடுத்தாளப் பெற்றுள்ளது — 6.

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம் கண்டதில்"

'அவர் அன்ன ஒப்பாரி என்பதற்குப் பரிமேலழகர்' அவர் மக்களை யொத்தார் போன்ற ஒப்பு என்றெழுதுவதால், 'ஒப்பாரி' என்ற சொல் 'ஒப்பு' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளதென்றே அவ்வுரையாசிரியர் கருதுகின்றார் என்று கூறலாம்.

"கடவு ளைக் கடலுள்ளெழு நஞ்சுண்ட
உடலுளானை ஒப்பாரி இலாதவெம்
அடலுளானை அரத்துறை மேவிய
சுடருளா னைக் கண்டீர்நாம் தொழுவதே"

என்ற இடத்து அப்பர் அடிகள் 'ஒப்பாரி' என்ற சொல்லை ஒப்புப்பொருளில் (resembleness) எடுத்தாண்டுள்ளார்-7. 'இறைவனுடைய பெரு வீரத்திற்கு ஒப்பு இல்லை' என்பது கருத்து திருவள்ளுவரால் கையாளப் பெற்ற இச்சொல் பன்னூறாண்டுகளுக்குப் பிறகு, பழுத்த தமிழ்ப் புலவராகிய அப்பரால் கையாளப் பெற்றுப் புதுவாழ்வு பெறுகிறது.

1. 4; 'சிவன்' என்ற சொல் சிவபிரானைக் குறிக்கும் சொல் ஆகும்: இதனை 'Siva' என்ற வடசொல்லாக்கமாகக் கருதுவார் உளரேனும். அப்பர் இதனை அருந் தமிழ்ச் சொல்லாகவே கொண்டு பாடியுள்ளார்- 'சிவ(த்தல்)' என்ற வினையடியாகப் பிறந்த சொல்லாகவே இது கொள்ளப்பட்டுள்ளது.

"சிவன் எனும் நாமம் தனக்கே உடைய
செம்மேனி எம்மான்"

என்ற இடம் இக்கருத்தை இன்று விளக்குவதாக அமைந்துள்ளது 8. 'சிவன்' என்ற சொல் 66 இடங்களிலும், 'ஆர்'

விகுதியுடன சேர்த்து 5 இடங்களிலும் அடிகளால் ஆளப்பட்டுள்ளன. 'சிவந்தான்' என்றும் ஓரிடத்துச் சிவனைக் குறிப்பிட்டுள்ளார் - 9. சடையினைச் 'செஞ்சடை 'என்றும், 'தீவணத்த செஞ்சுடை' என்றும் கூறி மகிழ்வதுடன், 'சுடர்' என்றும் 'சோதி' என்றும் செம்பொன் சோதி என்றும் கூறுவர் அடிகள் - 10. எண்ணற்ற இடங்களில் பெரொளிப் பிழம்பாக உள்ள பெருமானைப் போற்றியுள்ளார். சிவ பரம்பொருளின் செவ்வொளிக் காட்சி அனுபவம் உடைய அடிகள், இச்சொல்லை இவ்வாறே கொண்டு உணர்த்தியுள்ளார் என்பது அறியத்தக்கது

1. 5: பன்மை விகுதிகளாகத் தொல்காப்பியர் உரைத்த பலவற்றுள் ஒன்று 'கள்' என்பது. இதனைத் தொல்காப்பியர்,

"கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயரே
கொள்வழி உடைய பலவறி சொற்கே"

என்பர் - 11. அஃறிணை இயற்பெயர்களின் பன்மைக் குறிப்பு அவற்றொடு சேர்க்கப்பெறும் 'கள்' விகுதியான் விளங்கும் என்பது கருத்து.

"ஆர்கள் ஆகிலும் ஆக"
"இருபதுகள் தோள்"
"செய்வனகள் செய்யக்கண்டு"
"திருவருள்கள்"
"நீங்கள்" "நீர்கள்"
"பிழைத்தனகள்". "எழுமின்கள்"
'பிதற்றுமின்கள்"

என்பன அடிகளார் பாக்களிற் காணப்பெறும் தொடர்கள்.—12 'ஆர்' என்னும் வினாவினைக் குறிப்புடன் கள் விகுதி சேர்த்தலும், எண்ணுப் பெயர்களுடன் சேர்த்தலும், அஃறிணை வினைமுற்றுடன் சேர்த்தலும், முன்னிலைப் பன்மைப் பெயர்களுடன் சேர்த்தலும் (நீ — ர் — கள்) வியங்கோள் வினை முற்றுக்களுடன் சேர்த்தலும் இவருடைய பாடல்களிற் காணப் பெறுதலைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும், 'விகுதிமேல் விகுதி' என்று இவற்றைக் கூறல் பொருந்தும். முன்னிலை இடப்பெயர்களில், நீ—நின்னை என்ற வடிவங்களும் உன்னை, நுன்னை என்ற வடிவங்களும். இவர் தேவாரப் பதிகங்களிற் காணப்பெறுகின்றன. 13 இலக்கியங்களில் அரிதாகக் காணப்பெறும் சொல்வழக்குகள் இவர் பாக்களிற் காணப்பெறுகின்றமை அறிந்திடத்தக்கது.

1. 6. பேச்சு வழக்குச் சொற்களுக்கும் பெருமதிப்புத் தந்தனர் அடிகள்.

வைத்த	>	வைச்ச	>	வச்ச
நித்தலும்	>	நிச்சலும்		
விரித்து	>	விரிச்சு		
சிரித்து	>	சிரிச்சு		
கைத்த	>	கைச்ச	>	கச்ச

இவை ஒருவகையான மாற்றங்கள். இவை இவர் பாக்களிற் காணப்பெறும் வடிவங்கள் — 14.

உய்ந்து	>	உஞ்சு
மைந்தன்	>	மஞ்சன்

இத்தகு மாற்றங்களும் அடிகளார் வாக்கிற் காணப்பெறுகின்றன — 15. ஒன்று என்ற எண்ணுப் பெயரை 'ஒண்ணு' என்று பேச்சு வழக்கிற் குறித்தலும் உண்டு இவ்விருவகை வழக்குகளும் அடிகள் வாக்கிற் காணப் பெறும். 'ஒண்ணு' என்ற வழக்கு ஓர் இடத்தில் மட்டுமே உள்ளது. ஏனைய 288 இடங்களிலும் 'ஒன்று' என்ற திருந்திய வடிவமே உள்ளது. "எண்ணுகேன்' என்ற எதுகைக்கேற்ப "ஒன்றுளே" என்பதனை "ஒண்ணுளே" என்று மாற்றி வழங்குகின்றார் அடிகள் — 16. இவ்வாறே சழக்கு, சங்கடம், பொந்தை, களேபரம், தொந்தம், மொண்ணை, சரக்கு முதலிய பல சொற்கள் அடிகளார் பத்திப் பாட்டிலக்கியத்திற் புதிய வாழ்வு பெற்று விடுகின்றன. 16 பி.

1. 7: 'மாட்டேன் என்ற எதிர்மறைவினை அடிகளார் திருவாக்கிற் பொருளில் ஒரு மாற்றத்துடன் விளங்கக் காண்கின்றோம். 'செய்யமாட்டேன்,' ஓடமாடடேன்'. பாட மாட்டேன்' என்ற தொடர்களுக்கு, 'செய்ய இயலாதவன் ஆனேன்'. 'ஓடுதல் இயலாதவன் ஆனேன்' 'பாடுதல் இயலாதவன் ஆனேன்' என்று பொருள் கொள்ளுமாறு அடிகளார் பாநெறி அறிவுறுத்துகின்றது. 'நான் செய்யேன்'. 'ஓடேன்', பாடேன்' என்று பொருள் கொள்ளுதல் அடிகள் பாநெறிக்குத் தக்கதன்று. அடிகளார் திருவாக்கில் 'மாட்டேன்' எனவரும் இடங்கள் அனைத்தும் இவ்வாறு பொருள் செய்யத் தூண்டுகின்றன.

'மாட்டுதல்' என்ற வினையடியாகப் பிறந்த பெயரெச்சம் 'மாட்டா' என்பதாகும்; இது 8 இடங்களில் வருகின்றது. 'மாட்டேன்' என்ற தன்மை ஒருமை வினை வடிவம் 60 இடங்களிலும், 'மாட்டீர்' என்ற முன்னிலைப் பன்மை வடிவம் 2 இடங்களிலும், 'மாட்டான்' 'மாட்டாதான்' என்ற வினையாலணையும் பெயர் வடிவங்களில் முன்னது 4 இடங்களிலும், பின்னது 1 இடத்திலும், 'மாட்டாதார்' 'மாட்டார்' என்ற படர்க்கைப் பன்மை வினையாலணையும் பெயர் வடிவங்களில் முன்னது 1 இடத்திலும், பின்னது 5 இடங்களிலும் வருகின்றன. இவையனைத்தும் இயலாமைப் பொருளிலேயே வழங்குகின்றன என்பதும், நேர் எதிர் மறைப் பொருளில் வழங்கப் பெறவில்லை என்பதும் அறியத் தகுந்தன [17].

"காணமாட்டா" "பாடமாட்டேன்", "உணரமாட்டீர்", "மாட்டாதான்". "அறியமாட்டான்", "காணமாட்டார்" "மாட்டாதார்" என வரும் இடங்கள் காணத் தக்கன. பெரும்பாலும், மாட்டுதல் என்ற வினைப் பகுதியின் அடியாகப் பிறந்த இவ்வடிவங்கள், செயவென் எச்சங்கட்குப் பின்னர் வந்து விளங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1. 8: ஐம்பொறிகளையும் அடக்கி நிற்கும் தொண்டர் இயல்பை நம் அருளாளர் வியந்து போற்றுவர். அறிவு என்ற அங்குசத்தால் ஐம் பொறிகளாகிய யானைகளை அடக்குதல் வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து [18].

> "உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
> வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து"

திருஞானசம்பந்தரும், "தொண்டர் அஞ்சுகளிலும் அடக்கி" என்ற இவ்வித்தகத்தை எடுத்துப் பாராட்டுவர் [19]. அப்பரடிகள், "தொழுது அகம் குழைய மேவித் தோட்டிமை உடைய தொண்டர்" என்று பாடுகின்றார் [20] இவ்விடத்துத் தொட்டிமை என்ற பாட வேறுபாடும் உண்டு. தொட்டிமை' என்ற சொல், 'ஒற்றுமை, அழகு' என்ற பொருளில் சிந்தாமணி, பெருங்கதை ஆகிய நூல்களிற் காணப்பெறும் [21]. 'அஞ்சு பொறிகளையும் அறிவு என்னும் தோட்டியால் அடக்கும் தன்மை' என்ற பொருளில், இவ்விடத்தை 'தோட்டிமை' (தோட்டி + மை > தோட்டிமை) அடிகள் வழங்கியிருத்தலும் கூடும். இச் சொல் வடிவம் அரும்பொருள் சான்ற அடிகள் ஆட்சியாக உள்ளது. 'அடங்காத் தன்மை' என்ற பொருள் உடைய

'பட்டி' என்ற சொல்லுடன் 'மை' விகுதியைச் சேர்த்துப் 'பட்டிமை' என்ற சொல்லைப் படைத்துக் 'கீழ்மை' என்ற பொருளில் ஆள்கின்றார் அடிகள் [22]. 'பட்டிமை' என்ற இச்சொல் லாட்சியும், 'தோட்டிமை' என்ற சொல்லிற்கு இங்குக் கண்ட பொருள் தக்கதென்பதற்குச் சான்றாகும். 'காதன்—மை' — [23]. 'பத்தி—மை' — [24] என்றும் வரும் சொல் வடிவங்கள் கருதத் தக்கன ஒரு பண்புப் பெயரினைப் பின்னும் பண்பு விகுதியை (மை)ச் சேர்த்து ஆள்வது அடிகட்கு இயல்பு ஆம்.

1. 9: 'கத்து' என்ற ஒரு சொல் தமிழில் வழங்குகின்றது; 'பொய், கரவு' என்ற பொருள்களை உடையது இச்சொல். இறைவன் உயிரின் உள்ளத்தில் இருந்தும் தன்னைத் தோன்றாமல் மறைத்து நிற்கும் அருள் இயல்பு உடையான், ''தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே'' என்று பாடுவர் அடிகள் 24. பிறிதோர் இடத்து, ''தோன்றாதென் உள்ளத்தின் உள்ளே நின்ற கத்தாம் அடியேற்கு'' என்று பாடுகின்றார் [25]. இவ்விடத்தே கத்து என்ற சொல்லிற்கு 'கரவு, பொய்' என்ற பொருள் கூறுவர்: தேவார ஒளிநெறி ஆசிரியர் 'ஒலி' என்ற பொருளைக் கூறுவர்; 'கத்து' என்னும் சொல் 'உள்ளொலி'யைக் (inner voice) குறிக்கும் என்பது அவர் கருத்து [26]. ''களவும் கத்தும் அற'' என்ற மொழியின் பொருளாகத் திருட்டும் பொய்யும் நீங்குக என்று கூறுவதையும் இங்கு நினைவுகூரலாம்,

1. 10: அடைவு திருத்தாண்டகம் என்ற பகுதியில் பள்ளி, வீரட்டானம், குடி. ஊர். கோயில். காடு, வாயில், ஈச்சரம், மலை, ஆறு, குளம். கா என்று முடியும் ஊர்களை உரைத்து அவற்றைப் போற்றுகின்றார் அடிகளார் [27] தமிழகத்து 'ஊரும் பேரும்' பற்றிப் பல நுட்பங்களை இப்பதிகத்துக் சொல்வடிவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

''கடுவாயர் தமைநீக்கி என்னை ஆட்கொள்
கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல் வாயில்
நெடுவாயில் நிறைவயல் சூழ் நெய்தல் வாயில்
நிகழ்முல்லை வாயிலோடு ஞாழல் வாயில்
மடுவார்தென் மதுரை நகர் ஆலவாயில்
மறிகடல்சூழ் புனவாயில் மாடநீடு
குடவாயில் குணவாயில் ஆனவெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடாவன்றே.'' [28]

'ஆலம்—விடம்; ஆலவாய் என்பது நச்சுப் பாம்பு தன் வாயோடு வாலை வைத்து வளைத்து எல்லை காட்டியதால் மதுரை நகர்க்குக் காரணப்பெயர்' என்று புராணம் கூறும். 'ஆலவாயில்' என்பதே சரியான சொல்வடிவம் என்பது அப்பர் பாடலால் விளங்குகின்றது. நெய்தற்பூக்கள் அடர்ந்தது நெய்தல் வாயில்: முல்லைப்பூக்கள் செறிந்தது முல்லை வாயில்; ஆலமரங்கள் செறிந்தது மதுரையாகிய ஆலவாயில் என்கிறது பாட்டு. இயற்கை நெறிப்படி இவ்வாறு "ஆலவாயில்" என்று இருந்த பெயரே. புராணகாலத்தே வேறு கதை விளக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதலாம் [29].

"ஆலவாயில் அப்பனே அருள் செயாயே" என்று அடிகள் பாடுவதை இவ்வாறே பொருள் கொள்ளவேண்டும்.

2. 0: இவ்வாறு அப்பர் தேவாரத்துக் காணப்பெறும் அரிய சொல் வடிவங்கள் பல. அவற்றை ஒவ்வொன்றாய் விரித்துரைக்கப்புகின் 'விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்' என்ற நிலை வந்திடும் ஆதலின் சுருக்கமாகச் சொன்னால், காய்தல், உவத்தல் அகற்றி நடுநிலைமையில் நின்று நோக்குவார்க்கு அப்பர் தேவாரச் சொற்கோவை காட்டும் விழுமிய சொல் வடிவங்கள் பல. அவை சிந்தனைக்கு விருந்தாகவும். இலக்கிய நயம் காட்டும் எழில் சார்ந்தவையாகவும் அமையும். அதனுடன் இடைக்காலத் தமிழிலக்கியத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும், போக்கினையும் உணர்த்துவதாக அமையும் என்றும் கூறலாம்.

அடிக்குறிப்பு விளக்கம்

1 "Literature is the interpretation of life through the medium of words".
New methods for the study of Literature
Edith RICKER — 1935 — P. 2

2 "As words are the only symbols by which literature is conveyed from one mind to another, the study of them is an important part of the analysis of style".
Ibid — P. 73.

3 Ibid — P. 90

4 திருத்தொண்டர் புராணம் — பா. திருஞான — 598.
பா. அப்பூதி — 12.

5 திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பதிகங்கள், — சைவ சித்தாந்த மகாசமாசம் — மூன்றுவது பதிப்பு — 1941 — பா. 2705 — 2714

6 திருக்குறள் மூலமும். பரிமேலழகர் உரையும் — சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் — எட்டாவது பதிப்பு — 1951— குறள் 1071 உரை

7 மேற்படி — தேவாரப் பதிகங்கள் — பா. 1092.

8 ,, பா. 1058

9 ,, பா. 72, 84, 135. 554. 566. 638. 948. 1058. 2063, 2356, 2946, 3056 முதலியன 1149. 1562. 2370, 2621. 2483 முதலியன

10 ,, 121—2 163—8. 160—6, முதலியன

11 தொல்காப்பியம் மூலம் — சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம் — முதற் பதிப்பு 1943 — சொல் 654

12 மேற்படி — தேவாரப்பதிகங்கள் பா. 1975, 313, 2555, 450, 574, 3022, 1245. 413

13 மேற்படி — தேவாரப்பதிகங்கள் — பா. 82, 589, 1303, 609, 790, 2016, 3021, 837, 990, 2072. 742.

14 மேற்படி தேவாரப்பதிகங்கள் — பா. 1673; 1673, 1980 2603 1073, 1673.

15 மேற்படி தேவாரப்பதிகங்கள் — பா. 2402, பா. 1459

16 (ஏ) மேற்படி தேவாரப்பதிகங்கள் — பா 3052
(பி) பா. 499. 569. 265 1820, 1039 முதலியன

17 மேற்படி தேவாரப்பதிகங்கள் — பா. 207 265. 229, 553, 756, 306, 2194, 341, 238, 2194 முதலியன

18 மேற்படி திருக்குறள் கழகப்பதிப்பு குறள், 24

19 திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள் — சைவசித்தாந்த மகாசமாசம் — முதற்பதிப்பு 1931 பக். 409

20 திருநாவுக்கரசர் தேவாரப்பதிகங்கள் — மேற்படி பதிப்பு பா. 510

21 ( ) சீவகசிந்தாமணி :— "ஆடல் தொட்டிமை உருவம்" பா 1255 "தொட்டிமை உடைய வீணை" பா. 2047
( ) பெருங்கதை :— "கலாபத்துத் தொட்டிமை கலந்த தூசு" உஞ்சைச்காண்டம் — 508.

22 மேற்படி பதிப்பு பா. 2174

23 மேற்படி பதிப்பு பா. 1456

25 மேற்படி பதிப்பு பா. 913

26 தேவார ஒளிநெறி — அப்பர் (க) சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1960 — பச். 70

27 மேற்படி பதிப்பு பதிகம் 284

28 மேற்படி பதிப்பு பா. 2803

29 பார்க்க "ஆலவாய் என்னும் பெயர் வழக்கு" கட்டுரை — சொ. சிங்காரவேலன் — "ஞானசம்பந்தம்" 1965.

"நின்" ஈற்றுத் திரிபும் இயல்பும்.

(நக்கீரன் வழியடிமை. புலவர் பி மா. சோமசுந்தரனூர்,
இராணிப்பேட்டை.)

க. முன்னுரை

ஆக்கையைப் போற்றுவார் ஆருயிரைப் போற்றுவார் ஆம். மொழியைப் போற்றுவார் ஆருயிர்க்கு ஏற்றம் ஆற்றுவார் ஆம். என்னே? மன்பதையின் மதி விளக்கத்துக்கு உறுதுணையாவது மொழியாகலான்.

ஒரு மொழியின் தொன்மையும் வன்மையும், திட்பமும், ஒட்பமும், அதன் இலக்கண வளத்தால் உணரப்படும். இவ் வியல்புகளையுடையதே சாவா மூவா மொழி ஆம். முத்தமிழ் என வைத்தேத்தப்படும் செந்தமிழ் இவ்வியல்புகள் முற்றும் இயைந்த தென்பது அறிஞன்மார்க்கு ஒப்பமுடிந்ததொன்ரும்; இவற்றின் ஒரீஇ, ஆட்சித் திண்மையும் அயலவர் தம் மொழிப்பற்றை நாட் டொருமை காட்டி யழிப்பான் மேற்கொளும் செயல் வன்மையுமே இலக்கணங்களாகவுடைய இந்தி முதலிய மொழிகள் அங்ஙன மாகா, அவை ஏற்றமுள தாக் காட்டியுலவல் 'முலையிரண்டு மில்லாதாள் பெண் காமுற் றற்று' என்க.

அடியவன் தமிழ் பயிலுங்காலைச் சிற்சில வையங்கள் எழுந் தன அவற்றை அறிஞன்மார்க்கு உணர்த்தின் அவையகலு மாறு கிட்டலுங்கூடும் என்ற துணிபான் இக் கட்டுரை வரைதல் மேயினேன். இதனுள், குற்றமுளதேல் அஃதென் மடமையின் விளைவெனவும், குணமுளதேல் குன்றுதோருடுங் குழகன் திருவருள் விளைவெனவுங் கொண்மின் என்று இறைஞ்சு கின்றேன்.

உ. தொல்காப்பிய விதி

ஓல்காப் பெருமைத் தொல்காப்பியனூர் அருளிய னகார வீற்றுச் சொற்புணர் விதியாமாறு :

"னகார விறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே"

(எழுத்து 353)

இந்நூற்பாவினுல் 'பொன்' என்பது 'குடம்' என்பதோடு புணரும் வழி 'பொற்குடம்' என ஆம் என்பதும் 'மகன்' என்பது 'பெற்ருள்' என்பதோடு புணரும் வழி 'மகற்பெற்ருள்' என ஆம் என்பதும் பெறுதும். இனி,

> ''நீயெ ௭ெனுருபெயர் நெடுமுதல் குறுகும்
> ஆவயி னகரம் ஒற்றுகும்மே'' (எழுத்து 180)

என்னும் விதிப்படி 'நீ' என்பது நெடுமுதல் குறுகி னகரவொற்றுப் பெற்று 'நின்' என நிற்கும் என்பதும், நின்றகாலை னகாரவிற்றுச் சொற்புணர்விதியை யேற்கும் என்பதும் பெறுதும் இதனுனே,

> ''நீயெ ௭ெனுருபெய ருருபிய னிலையு
> மாவயின் வல்லெழுத் தியற்கை யாகும்''
> (எழுத்து 254)

என்னும் நூற்பா நின்' என்ற சொல்லோடு இயையும் வருமொழி வல் லெழுத்து மிகாது என்ற அளவினே உணர்த்திச் செல்வது என்பதும் நிலைமொழி யிற்றின் திரிபும் இயல்பும் நிகழ்த்திய தன்று என்பதும் தெளியப்படும். இவ் வீகார வீற்றுமொழி விதிகள் யாவும் வருமொழிபற்றியே கிளத்து வதும் ஈண்டு நினைவுகூரற்பாற்று.

௩. நன்னூல் விதி

பல்கலைக் குறிசில் பவணந்தி எனப் போற்றப்பெறும் நன்னூலாசிரியர்.

> ''தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோ
> டுறழு நின்னீ றியல்பா முறவே. (218)

என்ருர். இதை விளக்கிய சங்கர நமச்சிவாயப் புலவர்,

> ''தன்பகை, தற்பகை; என்பகை, எற்பகை; எனவும்
> நின்பகை எனவும் முடியும்''

என்று எடுத்துக்காட்டுந் தந்தார்.

காண்டிகையுரை வெளியிட்ட திருத்தணிகை விசாகப் பெருமாளையர், வை, மு. சடகோபராமானுசாரியர். சே. கிருஷ்ண மாசாரியர், ஆறுமுக நாவலர் முதலியோரும் மேற்காட்டியவண் ணமே கூறிப்போந்தனர். நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை (எழுத்து) என்ற நூலின் ஆசிரியராய பேராசிரியர் மோசசு. பொன்னையா. எம். ஏ, அவர்களும் அந்நூல் பக்கம் 201-இல்

'நின்பகை - னகரம் இயல்பாயிற்று என்று காட்டி அவ்வளவினே நிறுத்திக்கொண்டார் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட விருத்தியுரைகளின் வேற்றுமையும் காண்டிகையுரை யுங்காணுங்கால், கழகத்து 1958-ஆம் ஆண்டு வெளியீட்டில் (Sep 1958)

"............ நின்பகை" எனவும் வரும். என்றுள்ளதும்

1971 ஆம் ஆண்டுப் பதிப்பில்

"...... ... நின்பகை. நிற்பகை எனவும் வரும்"

என்றுள்ளதும் காண்டல்கூடும். இவ்வேறுபாடு எற்றினு லாயதோ? பதிப்புதோறும் வேறுபாடு மிகின் கற்போரும் கற்பிப்போரும் மயங்காது வேறென் செய்வர்? ஈண்டொன்று குறிக்காமலிருக்க இயலவில்லை. "மாஞ்சீர் கலியுட்புகா" னும் யாப்பருங்கலக் காரிகையுரைக்கண்

"நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை விங்குகவுட் கடுவன்
உண்டு சிலம்பேதி யோங்கிய இருங்கழைப்
படிகம் பயிற்று மென்ப
மடியாக் கொலைவின் என்னையர் மலையே.

"இவ்வாசிரியத்துள் தன் சீரும். வெண்சீரும், நேர்நடு வாகிய வஞ்சியுரிச் சீரும் வந்து வெண்டளையும். தன்தளையும், கலித்தளையும், வஞ்சித்தளையும் மயங்கி வந்தவாறு கண்டு கொள்க"

என்றுளது. இப்பாட்டுள் வஞ்சிக் சீரும் தளையுங் காண் டற்கியன்றிலது. காண்டல் வேண்டுமேல் 'சாரற்குறுங் கோட்டு' எனவும் "வார்தீஞ்சுளை" எனவும் சீர்பிரித்துக் காணலாகும். இன்னணம் நூல்கள் பிழையுடன் நிலவின் ஆசி ரியர் எங்ஙனம் உணர்த்துவார்? இதே காரிகையுரைக்கண் "குடநிலைத் .... சென்றவாறே" என்னுந்தரவு கொச்சகக் கலிப்பாவில் நேரீற்றியற் சீரும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச் சீரும் வாராது நிரையீற்றுசிரிய உரிச்சீரும், வெண்பா உரிச் சீரும் நேர்நடுவாகிய வஞ்சியுரிச் சீரும் வந்து, வெண்டளையும், ஆசிரியத்தளையும், கலித்தளையும், வஞ்சித்தளையும் மயங்கி வந்த வாறு கண்டு கொள்க" என்றுளது இஃதும் அவ்வாறு காண்டற்கியலா வண்ணமே அச்சிடப்பட்டுள்ளது ஏனைய நூல்களில் சிறு பிழைகள் எளிதில் திருத்தமுறக்கூடும் இலக்

கண நூல்கள் திருத்த முறுதற்கு முன் பெரிதும் குழப்பமே விளைக்கும். ஆகலின் இந்தகு நூல்களைப் பதிப்பிப்பார் பெரிதும் ஊக்கஞ் செலுத்திப் பிழைகளை யகற்றல் வேண்டும்.

இனி, கழகம் வெளியிட்ட காண்டிகை யுரையோ, (Jul. 72)

" நின்பகை—நின் என்பது இயல்பாக வந்தது "

என்றுணர்த்துகின்றது. எனவே காண்டிகையுரை விருத்தி யுரையின் ஒரு பதிப்பை ஆதரித்து மற்றொரு பதிப்பைக் கை கழுவி விடுகிறது.

ச. நின்=ஈறுதிரிதல்

நின் என்பது இயல்பாகவே வரும் என்று நன்னூலார் இயம்பினரேனும் வேற்றுமைப் புணர்ச்சியில் திரிதல் செய்யும். சான்றாக.

" யாரை யோநிற் புலக்கேம் " (அகம் 46)
தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே (புறம் 137)
பெருமநிற் கண்டிசி னோரே (ஐங்குறுநூறு 85)
அயலார்நிற் பழிக்குங்கால் (கலி 59)
ஆழி முதல்வநிற் பேணுதும் (பரிபாடல் 2)
நிற் காணு மோர்க்கே (பதிற்றுப்பத்து 83)

என்பவை நோக்குக.

இவ்வாறு 'நின்' திரிபுபெருவரவிற்றாகவும் " நின்னீறி யல்பா முறவே " என்ற விதி வீழ்ந்து படாதோ? படுமே.

படுமென்பாரை நோக்கி, அற்றன்று; நீயிர் காட்டியஇரண்டாம் வேற்றுமைத்திரிபன்றே இத்திரிபை

நன்னூலாசிரியர்,

" இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பு
முயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்று
மன்ன பிறவு மாகுமை யுருபே " (255)

என்ற விதியான் அமைத்தாரெனக் கொள்கவென்பாருமுளர்.

இவ்விதியான் 'நின்' ஈறு ஏனையிடங்களில் திரியாமை உணரப்படும். படின் குற்றப்படும். என்னை ?

"நீயே யாகுநிற் கமைந்தவில் வாசனம்"
(மணிமேகலை மந்திரங் கொடுத்த காதை)
"ஒன்றுகே ளுரைக்க நிற்கோ ருயிரென வுரியோன் றன்னை"
(கம்பராமாயணம் சுந்தர காண்டம் நிந்தனைப்படலம்).

என நான்காம் வேற்றுமைத் திரிபு முண்மையாகலின் இரண்டாம் வேற்றுமைக்கண் வருந்திரிபு கூறினர், நான்காம் வேற்றுமைக்கும் உரையாமை குன்றக் கூறலாமன்றோ?

அன்றியும் "நின்னீ றியல்பா முறவே" என்றார், பின்னர் வேற்றுமைக்கண் திரியுமென்று ஒவ்வொரு வேற்றுமையையும் விதந்தெடுத் துரைப்பின் முதற்கண் 'இயல்பு' என்ற விதி இழுக்கத் துட்படுமென்க.

இதனை முற்றுமோர்ந்தே. நின் என்ற சொல்லை ஆசிரியர் தொல்காப்பியர் விதந்தெடுத்து விதி கூறுதொழிந்தார், தொல் காப்பியரினும் தோற்றம் பெரிதுடையேமென்று கருதி, நன்னூ லாசிரியர் இதனை விதந்தோதி குற்றப்பட்டார். இது கருதியே குட்டித் தொல்காப்பியம் எனப் போற்றப்படும் இலக்கண விளக்க நூலாசிரியர் இரண்டாம் வேற்றுமை முடிபு வேறுபாட்டுக்கு நன்னூலார்தம் 'இயல்பின் விகாரமும்' என்ற நூற்பாவை விடுத்து 'மெல்லெழுத்து மிகுவழி' என்ற தொல்காப்பிய நூற் பாவை யெடுத்தாண்டுகொண்டதூஉ மென்க.

இன்னணம் ஐயமெழுப்புவ பலவுள, அவற்றை வேறொரு கட்டுரையிற் காட்டுதும் ஈண்டு ஒன்றுமட்டுங் காட்டி இக் கட்டுரையினை முடிப்பாம்.

ரு. நூலும் பாயிரமும்

"ஈவோன் றன்மை யீத லியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபென
வீறிரண் டென்ப பொதுவின் றொகையே'

என்று கூறிய பண்டைச் செந்தமிழ்ச் சான்றோரை முரணிய நன்னூலார்,

"நூலே நுவல்வோன் நுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்
எல்லா நூற்கு மிவைப்பொதுப் பாயிரம்"

என்று நூலை மிகுத்துக் கூறி ஐந்தாக்கினர். அதையடுத்த நூற்பாவில்,

''நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி''

என்றும் உரைத்தார். முதற்பாவில் பொதுப்பாயிரத்தின் ஒரு கூறாக நூலை வைத்தவர், இவ்விரண்டாம் பாவில் பொதுப் பாயிரத்தோடு சிறப்புப் பாயிரத்தையும் இணைத்து நூலுக்கு ஒரு கூறாக்கினார் முதல் நூற்பாவுக்கு விருத்தியுரையாசிரியன் மார் கூறும் விளக்கம் வியப்பூட்டுவதாம். அதனைக் கீழே தருவல்:

''ஈவோன்றன்மை யீதலியற்கை - கொள்வோன் றன்மை கோடன் மரபென - வீரிரண் டென்ப பொதுவின் றொகையே'' என்பாரு முளராலோ வெனின்: பாயிரங் கூறுதல் நூல்கட் கன்றிப் பிறவற்றிற் கன்றே; அங் ஙனமாதலின் நூல்களின் வரலாறென்றுமே கூற வேண்டும்: அதனோடு ஆசிரியன் வரலாறு முதலிய நான்கினையும் உடன் கூறுதல் வரலாற்று முறைமையின் வாராதார் நூல் களைக் கற்பிக்கவும் கற்கவும் புகின் ''பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்பேதை வினை மேற்கொளின் ''என்ற வாறேயாய், நூல்க ளருமையும் பெருமையுங் கெட்டுப் பயன் படாவாமென் பது கருதி யென்க''

இஃது விருத்தியுரையின் ஒரு பகுதி. இதன்கண்' பண்டைச் சான்றோர் பொதுப்பாயிரத்துள் நூலை யுரையாமைக்கு விளக் கமோ, நன்னூலார் உரைத்தமைக்கு அமைதியோ இல்லாது, பண்டைச் சான்றோரும் நன்னூலாரும் ஒருப்பட்ட நான்குறுப் புக்கே விளக்கமுள்ளது. சிவஞான முனிவர் விளக்கம் என்ற தலைப்பின்கீழ் வரும் மற்றொரு பகுதி கீழ்வருமாறு:

''அங்ஙனமாயின், நான்முகத்துரைக்கப்படும் பாயிரவுறுப்பினுள் நூலைக் கூறுவது பொருந்ாதெனின், இவ்விலக்கணத்தான் அமைபவன் ஆசிரிய னென்றாற்போல அவ்விலக்கணத்தா னமைவது நூலென்ற தன்றிப் பாயிரத்துள் நூலைக் கூறியதன்றும். ஆதலின் ஆசிரியர் தொல்காப்பியர் நூலின் இயல்பை ஒத்துறுப்பாகிய மரபியலுள் கூறினாற்போல இவ்வாசிரியர் பாயிர வுறுப்பினுள் கூறினாரென்க.''

விருத்தி யுரையுள், இது சிவஞான முனிவர் விளக்கம். இது சங்கர நமச்சிவாயப் புலவருரை எனப் பகுத்துணர்ந்ததும் எவ் வாயில் பற்றியோ அறிகிலம். பல்கலைக் கழக வினுத் தாள்களும் விருத்தியுரை யாசிரியரெனப் பொதுப்படக் குறியாது சிவஞான முனிவர் எனச் சிறப்புப் பெயர்கொடே குறிப்பவாயுள. இங் ஙனம் இரு பகுதியாக இவ்விருத்தியுரை பகுப்புண்டிலதேல் சங்கர நமச்சிவாயர் எடுத்த பொருளை யிகந்து மற்றொன்று விரித் தார் என்னுங் குற்றத்துக்கு ஆட்படாரென்க.

> இனி விருத்தியுரையின் பிற்பகுதியுட் கூறப்பட்ட "இவ்விலக்கணத்தா னமைபவனாசிரிய னென்றாற்போல அவ்விலக்கணத்தா னமைவது நூலென்ற தன்றிப் பாயிரத்துள் நூலைக் கூறியதன்றாம்"

என்பது ஒவ்வாது. என்னை? அவ்விலக்கணத்தா னமைவது நூலென்றாற்போல இவ்விலக்கணத்தா னமைபவ னாசிரிய னென்றதன்றிப் பாயிரத்துள் ஆசிரியனைக் கூறியதன்றாம் எனவும் படும் ஆகலின்

அன்றியும் பாயிரம் நூலின் ஒரு கூறென்பது தோன்றிட "நூலினியல்பே நுவலி னோரிரு பாயிரந் தோற்றி" என்றுரைத் தமையால் உறுப்பாகிய பாயிரத்துள் நூலாகிய முதல் அடங் காமை பெறப்படும். எனவே பொதுப்பாயிரத்தின் உறுப்பாக நூலைக் கூறுதல் இயைவதன்று. இது சுட்டியே இலக்கண விளக்க நூலாரும்,

> "... ..... ஐந்தென்பாருமுளர். அஃதிலக்கணமன்று. அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூலடங் காமையின். "நூலினியல்பே நுவலி னோரிரு பாயிரந் தோற்றி" என்பவாகலானும் நான்முகம் முதலிய குறிக ளானும் அஃததற்கு அவயவமாதலறிக."

என்றார். இலக்கண விளக்கச் சூறாவளியில் சிவஞான யோகிகள் இதனை மறுத்து நன்னூலார் பக்கத்தை வலியுறுத்தினர். ஆயினும் அம்மறுப்பு இயையாமையைப் பெரும் புலவர் அரசஞ் சண்முகனார்,

"இனிச் சிவஞான முனிவர் தமதிலக்கண விளக்கச் சூறுவளியில் "நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கி யென்றமையானே நூலியல்பு பாயிரத்துள் அடங்கா தென்றல் கருத்தன்றென மறுக்கவென்றார். ஆண்டு நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கியென்றது நூலித் தன்மைத்தென அதனிலக்கணங் கூறாமல் இந் நூல் தமிழை நுதலிற்று; அறத்தை நுதலிற்று; பொருளை நுதலிற்று; இன்பத்தை நுதலிற்றெனக் கூறியதனைப் பிறர்க் கறிவிப்பதாகலின் ஆக்கியோனாற் கூறப்படாத வியல்புடைய பாயிர வகையுளொன்றாகலும். இன்னின்ன இலக்கணத்தது பாட்டு,

"இன்னின்ன இலக்கணத்தது உரையென்றாற்போல, இன்னின்ன இலக்கணத்தது நூலென நூலியல்பு நூலுட் கூறப் படுந் தன்மைத்தாகலின். அஃதாக்கியோனாற் கூறப்படும் இயல் பிற்றாய நூலினடங்கிப் பாயிர வகையுளடங்காமையு முணரப் படும் என்பது.

"இன்னும் அவர் அவயவமாகிய பாயிரத்துள் அவயவி யாகிய நூல் அடங்காதெனக் கூறிய இலக்கண விளக்க நூலாரை நோக்கி, மூன்றுறுப்பு அடக்கிய பிண்டத்தானும் எனவும் ஓத்துப் படலம் என்னும் உறுப்பினெனவும் ஆசிரியர் கிளந் தெடுத்தோதலின். நூலியல்பு அந்நூலுக்கு அவயவமாமென்றும் அதனால் அது பாயிரத்துள் அடங்குமென்றுங் கூறினார். அதுவும் உரையன்று. என்னை? அவர் கூறியவாறு நூல் அவயவியும் நூலியல்பு அவயவமும் ஆயினும் அவயவியாகிய உடம்பின்கண், கண் காது முதலாய வகவுறுப்பும், உபநயனமெனுங் கண்ணாடி முதலிய புறவுறுப்பும் அடங்குமாறுபோல. நூலாகிய அவயவியின் கண் சூத்திரம், ஓத்துப்படலம் நூலியல்பென்னும் அகவுறுப்பும். ஈவோன்தன்மை முதலிய நான்கு வகைப் பாயிரமாகிய புற வுறுப்பும் அடங்குமெனல் பொருந்துமன்றிக் கண்ணாடியாகிய புறவுறுப்பிற் கண்ணாகிய அகவுறுப்பு அடங்கும் எனல் பொருந் தாமைபோல, அந்நூலது புறவுறுப்பாகிய பாயிரத்துள் அதன் அகவுறுப்பாகிய நூலியல்பு அடங்கும் எனல் பொருந்தாமையான் என்பது.

"இனி, முகத்திற் கண் காது முதலாயின அடங்குமாறு போலப் பாயிரமாகிய முகவுறுப்பின்கண் நூலியல்பும் ஏனை நான்கு வகையும் அடங்கும் எனின் அதுவும் பொருந்தாது. என்னை ? கண், காது, மூக்கு, வாய் என அவையெல்லாங் கூடிய வழியே முகம் எனப்படுவதன்றிக் கண் முதலாயவற்றைத் தனித் தனிக் கூறிய வழி முகம் எனப்படாதவாறுபோல அவர் கூறிய ஐவகைப் பொதுவும் பதினொருவகைச் சிறப்புங் கூடிய வழியே பாயிரம் எனப பெயர்பெறல் வேண்டுமன்றி அவை தனிநின்ற இடத்தும் அப்பெயர் பெறுதலிற் கூடாமையான் என்பது" என்று அறிவுறுத்தினர்.

இத்துணை இடர்ப்பாட்டுக்குங் காரணமாவது நூலை நன்னூலார் பாயிரத்துள் வைத்தமையேயாம். இதனைச் சிவஞான முனிவர் கூற்றானும் பெறலாகும். அது வருமாறு :

"ஆசிரியர் தொல்காப்பியர் நூலின் இயல்பை ஓத்துறுப்பாகிய மரபியலுள் கூறினற்போல இவ்வாசிரியர் பாயிரவுறுப்பினுள் கூறினரென்க"

இதனால் நூலியல்பு பாயிரத்துள் பெறப்படாததே என்பதும் அதனை உரைப்பான் புகின் வேறோரியலில் வைத்தே ஓதல் வேண்டும் என்பதும் பெறப்படும். இன்னும் இதனானே நன்னூலார் பாயிரத்துள் நூலைப் புகுத்திய செய்கை வலிந்து இயற்றியதே என்பதும் அது வரலாற்றோடு முரண்படுவதே என்பதும் தெளியப்படும் குதிரைமீது மனிதன் அமர்தல் வேண்டுமேயல்லாது மனிதன்மீது குதிரை அமர்தல் சால்பிற்றன்று

சூ முடிப்புரை

இதுகாறும் கூறியவாற்றால் நின் ஈறு வேற்றுமைப் புணர்ச்சிக்கண் திரிதல் பெரும்பான்மையும் இயல்பு சிறுபான்மையும் என்பதும் இதனால் 'நின்' ஈறு இயல்பாம் உறவே' என்ற சூத்திரம் அல்வழிக்கண் இயைபு உடையதேனும் வேற்றுமைக்கண் உடைத்தன்று என்பதும் பெறப்படும். இதனை ஓர்ந்தே தொல்காப்பியனார் அவ்வீற்றை விதந்து கூறிற்றிலர் என்பதும் நன்னூலார் கூறியது யாது நோக்கியோ என்பது ஐயமே என்பதும் அங்ஙனமே பொதுப் பாயிரத்துள் நூலை நுவன்றதும் நூனமுடையதே என்பதும் பெறப்பட்டன

வாழிய செந்தமிழ் ! வாழிய நற்றமிழ் !!

திருக்கற்குடி

பேராசிரியர் சி. கோவிந்தராசனுர்,
பழம்பொருள், கல்வெட்டு ஆராய்ச்சியாளர். கரந்தை.

திருக்கற்குடிக் கோயிலிலுள்ள, கல்வெட்டுக்கள் அனைத்தும் வரலாற்றுச் சிறப்புடையன. அவற்றுள் முதல் இராசேந்திர னுடைய கல்வெட்டுகளும் இடம்பெற்றுள்ளன. இராசேந்திர னுடைய ஆட்சியாண்டு மூன்றில் (கி. பி 1015) வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகளில் அவனுடைய வெற்றி மேம்பாடுகளைக் கூறும் மெய்க்கீர்த்திப் பகுதி இல்லை

கல்வெட்டு எண் 1

[செய்தி : முதல் இராசேந்திரன், கி. பி 1015-ல், திருக்கற்குடி விழுமிய தேவர் கோயிலில் திருப்பதியம் பாடுவார்க்கு நெல் நிபந்தம் செய்தது]

ஸ்வஸ்திஸ்ரீ இராஜராஜ கோப்பரகேசரி பர்மரான ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவற்கு யாண்டு மூன்ருவது நாள் அறுபத்தொன்றினுல் உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவர் பழையாற்றுக் கோயிலுள் ஆலமாளிகையில் தென்பக்கத்துக் கூடத்துத் திருவமுது செய்தருளாவிருந்து.

கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்துக் கற்பிரம தேயத்துத் தென்பிடாகையாயிறங்கின சிவன்பட்டராய சீகரண நல்லூர் அளந்தபடி நிலம் முப்பத்தாறரையே இரண்டுமா முக்காணி யரைக்காணி முந்திரிகைக்கீழ் எட்டுமாவிலும்,

ஊரிருக்கை நிலன் ஒருமாவரையும், கால்வாயும் நிலன் ஓர் பத்து மூன்றே ஒன்பது மா(வரை)யும், சுடுகாடு நிலன் இரண்டு மாவும், பிடாரிகோயில் நிலன் ஒரு மாவும், ஊருணியும் கரையு மாய நிலன் ஒன்றே ஒன்பதுமா அரைக்கீழரையே நான்கு மாக்காணி யரைக்காணிக்கீழ் எட்டு மாவும் நீக்கி, மானவாரிக் குளக்கீழ் நீர் பாய்ந்து ஒரு பூ விளையும் நிலன் பதின்மூன்றே யாறு மாவின்கீழ் ஆறு மாவினுல் நெல்லு தொளாயிரத்து முப்பத் தொருகலனே ஒரு நாழியும் புன்செய் நிலன் ஏழரையே ஒருமா வரையின்கீழ் நான்கு மாவினுல் நெல்லு நூற்றுத்தொண்ணூறு கலனே ஒரு தூணி ஐஞ்ஞாழியும், ஆக நீங்கல் நீக்கி நிலன்

இருபத்தேழேகாலே மும்மாவரை முந்திரிகைக்கீழ் நான்குமா முக்காணிக்கீழ் முக்காலே ஓருமாவினுல் நெல்லு ஆயிரத்து ஒரு நூற்று இருபத்தொருகலனே ஒரு தூணியறு நாழியும்.

திருக்கற்குடி மாதேவர்க்குத் திருப்பதியம் பாடுவார்க்கு யாண்டு மூன்ருவது முதலிருப்பதாகத் திருக்கற்குடி விழுமிய தேவற்கு யாண்டு மூன்ருவது முதல் வரியிலிட்டுக்கொள்க என்று திருவாய்மலர்ந் தருளினுரென்று,

திருமந்திர ஓலை அருமொழித்தேவ வளநாட்டு புலியூர் நாட்டுப் பாலையூர்க் கிழவன் அரையனுதர் எழுத்திலும், திருமந்திர ஓலைநாயகன் உய்யக்கொண்ட வெண்ணுட்டுக் கேரளாந்தக சருப்பேதி மங்கலத்து கிருஷ்ணன் இராமனுன இராஜேந்திர பிரமராயனும், நித்த விநோத வளநாட்டு ஆவூர் கூற்றத்துக் கிழவன் அமுதன் அதிரத்துக்கீரனை விலலவன் மூவேந்த வேளானும், பாண்டி குலாசனி வளநாட்டு எயினுட்டுக் குசக்குடையான் கண்டன் கண்ணனும், நித்த விநோத வளநாட்டுப் பாப்புணிக் கூற்றத்து அரைசூருடையான் ஓராயிரவன் பல்லவரையனும் ஒப்பிட்டுப் புகுந்த கேட்விப்படியே வரியிலிட்டுக் கொள்க.

கோப்பரகேசரி இராசேந்திரன்

சோழ மன்னர்கள் தங்களின் முன்னேர்களின் பெயர்களாகிய இராசகேசரி, பரகேசரி என்ற பெயர்களைத் தங்கட்குரிய அடையாளப் பெயர்களாக மாறி மாறிப் புனைந்து வந்தனர். தந்தை இராசகேசரியாயின், அவனுக்குப் பின் பட்டம் பெறும் மகன் பரகேசரியாவன் இம்முறையிலேயே விசயாலயன் முதலாக ஆட்சி பெற்ற பிற்காலச் சோழர்கள் முறையாகத் தங்கள் பெயர்கட்கு முன்னர் இப்பட்டப் பெயர்களை அடையாளமாகப் பெற்று வந்தனர். அம்முறையில், முதல் இராசராசன இராசகேசரி என்ற பட்டமுடன் ஆட்சி செய்தான். அவனுக்குப் பின் ஆட்சி பெற்ற அவன் மகன் முதல் இராசேந்திரன் பரகேசரி என்ற பட்டமுடன் ஆட்சி செய்தான்.

இராஜராஜ கோப்பர கேசரி

எனவே அவனது கல்வெட்டுக்களில், "ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி வர்மரான உடையார் ஸ்ரீ இராசேந்திர சோழ தேவர்,"

என்றே குறிக்கப்படுதல் மரபு ஆனால், கற்குடியிலுள்ள, இராசேந்திரனுடைய கல்வெட்டில், "ஸ்வஸ்திஸ்ரீ இராஜராஜ கோப்பரகேசரி வர்மரான ஸ்ரீ இராசேந்திர சோழ தேவற்கு யாண்டு மூன்ருவது நாள் அறுபத் தொன்றினல்" என்ற தொடரே தொடக்கமாக வெட்டப்பட்டுளது. கோப்பரகேசரி என்ற பட்டப் பெயருக்கு முன்னர் ' இராஜராஜ" என்ற பெயர் குறிக்கப்பட்டிருப்பது ஒரு தனிச் சிறப்புடையதாகும் இவ்வாறு பட்டப் பெயர் இயற்பெயர் ஆகியவற்றிற்கு முன்னர் இராசேந்திரன் தன் தந்தையின் பெயரைச் சூட்டிக் கொண்டிருப்பது, அவன் தந்தையின் பால் வைத்திருந்த அளவில்லாத அன்பும் பெருமதிப்புமேயாகும். இராசேந்திரனுடைய ஆட்சியாண்டு மூன்றுவதன் தொடக்கத்தில் இக் கல்வெட்டு தோன்றியுள்ளதால கல்வெட்டு தோன்றிய காலம், கி. பி 1015 என்பதாகும்.

திருப்பதியம் பாடுவார்க்கு நிபந்தம்

இராசேந்திரன், திருக்கற்குடி மாதேவற்கு திருப்பதியம் பாடுவார்க்கு வேண்டும் நிவந்தமாக 1121 கலம் நெல் வருவாயுள்ள நிலங்களை, கற்குடி இறைவன் பெயருக்கு உரிமை செய்துள்ளதை இக் கல்வெட்டு புலப்படுத்துகின்றது

பழையாறை - ஆலமாளிகை

இவ்வறச் செயலை, "இராசேந்திர சோழ தேவர் பழையாற்றுக் கோயிலுள் ஆலமாளிகையில் தென்பக்கத்துக் கூடத்துத் திருவமுது செய்தருளா விருந்து". செய்தானென்று கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கின்றது.

பழையாறை சோழநாட்டின் பழமையான நகரங்களுள் ஒன்று. சோழ மன்னர்களின் குடி முதலான இடமும் இதுவேதான். இங்கு சோழ மன்னர்களும் அவர்களது சுற்றத்தாரும் பரம்பரையாக வாழ்ந்து வந்தனர் என்பதை வரலாறுகள் தெளிவு செய்கின்றன. பிற்காலச் சோழராட்சிக்கு அடிகோலிய விசயாலயன் அரிசிற்கரைப் போரில் கலந்துகொண்டபோது வாழ்ந்திருந்த இடம் பழையாறை மாநகரேயாகும் பழையாறை மாநகரைச் சோழர் காலக் கல்வெட்டுகள், முடிகொண்டசோழபுரம் என்றும் குறிப்பிடுகின்றன.

(Irs No. 495 of 1907 and Irs No, 392 of 1908.)

பழையாறையின் கீழைப் பகுதி 'இராசராசபுரம்' என்று பெயர்பெற்றிருந்தது என்பதை திருச்சத்தி முற்றக் கல்வெட்டொன்று கூறுகின்றது. தஞ்சை, காஞ்சி ஆகிய இடங்கள் பிற் காலச் சோழர்கட்குத் தலைநகராக இருந்ததாயினும், இரண்டாவது தகுதி பெற்ற தலைநகராக பழையாறை இருந்தது. எனவே அங்கு சோழ அரசர்கள் தங்கி அரச காரியங்களைப் பார்ப்பது இயல்பாகவே இருந்தது. அம்முறையிலேயே, இராசேந்திரன் தனது ஆட்சியாண்டு மூன்றில் தொடரும் நாள் அறுபத்தொன்றில் பழையாறையில் உள்ள பழமையான மாளிகையில் தங்கியிருந்தான். மாளிகையைக் கோயில் என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. கல்வெட்டுகளில் இறைவனுக்குரியதாகக் கட்டப்படும் இடத்தைத் தளியென்றே குறிப்பிடப்படுவதால், கோயில் என்பது (கோ + இல்) அரசன் வாழும் மாளிகை என்பதேயாகும். பழையாறையிலுள்ள கோயில்களைப்பற்றி முதல் இராசராசனுடைய தஞ்சை இராசராசேச்சரக் கல்வெட்டுக்களில் குறிப்புகள் கிடைக்கின்றன, அவற்றுள் தளிச்சேரிப் பெண்டுகளைப்பற்றிக் கூறும் கல்வெட்டில் 'பழையாற்று வடதளி'', "தென் தளி" "முள்ளூர் நக்கன் தளி" என்று அங்கிருந்த திருக்கோயில்கள் மூன்றும தளியென்றே குறிக்கப்படுவதால் இக் கல்வெட்டில் குறிக்கப்படும் பழையாற்றுக் கோயில் என்பது சோழ மன்னர்களின் வாழ்விடமாகிய மாளிகையையே குறிககின்றது என்பது தெளிவாகும்.

ஆல மாளிகை

பழையாற்று மாளிகையின் உள் அங்கங்களுள் ஒரு பகுதி 'ஆல மாளிகை' என்ற பெயருடன் விளங்கியது இடையே பெரிய அளவில் முற்றமும், அதன் நாற்புறமும் சூழ்ந்ததாக அகன்று மேல்நிலை மாடங்களுடன் அமைக்கப்பட்டிருந்த மாளிகைக் கட்டடமே ஆல மாளிகை என்று பெயர்பெற்றதாகும்.

இவ்வால மாளிகை சோழ மன்னர்கள் உணவருந்தும் இடமாகவும், தானதருமங்கள் செய்யும் இடமாகவும் இருந்தது. எனவே, இராசேந்திரனும் இம் மாளிகையில் தென்பக்கத்துக் கூடத்தில் உணவருந்திய பின்னர், கற்கடி விழுமிய தேவர்க்கு திருப்பதியம் பாடுவார்க்குரிய நிபந்தம் செய்துள்ளதை. ஸ்ரீ இராசேந்திர சோழ தேவர் பழையாற்றுக் கோயிலினுள் ஆல மாளிகையில். தென்பக்கத்துக் கூடத்துத் திருவமுது செய்தருளா விருந்து" என்ற கல்வெட்டுப் பகுதி தெளிவு செய்கின்றது- இக் செய்தியினால் பழையாறையில் இருந்த பழங்காலச் சோழர் மாளிகை பல சிறந்த அங்கங்களோடு பெரியதாக அமைக்கப்பட்டிருந்த செய்தி புலனாகின்றது இவ்வளவு சிறப்புடன், அரச மாளிகைகளுடன் அன்றிருந்த பழையாறை இன்று இல்லை, அங்கு சோழர் காலக் கோயில்களைத் தவிர, வேறு மாளிகை இருந்ததற்குரிய எத்தகைய சுவடுகளும் இல்லை. மாறவர்மன் சுந்தரபாண்டியன் படையெடுப்பில் பழையாறை நகர் அழிக்கப்பட்டதாக அவனது மெய்க்கீர்த்தி புலப்படுத்துகின்றது அத்தீய செயலால் பழையாறையிலிருந்த மாளிகைகள் அழிக்கப்பட்டன.

— தொடரும்

கலைமகள் விழா

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் திருவள்ளுவராண்டு 2004 புரட்டாசித் திங்கள் 19ஆம் நாள் (5—10—73) வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. வி. அ. அரங்கசாமி அவர்கள் தலைமையில் நிகழ்ந்த "கலைமகள் விழாவில்" தஞ்சை அரசினர் மகளிர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திருமதி இந்திரா குமரன், M. A., அவர்களும், பூண்டி வீரையா வாண்டையார் நினைவு திரு, புட்பம் கல்லூரித் தமிழ் விரிவுரைாளர் திரு க இராமையன், M. A., அவர்களும் சிறப்பு சொற்பொழிவாற்றினர்.

விழாத் தலைவரவர்கள் 'சங்கத்தில் தமிழ் உணர்வோடு ஈடுபட்டு சங்கம் நமது' என்று கருதி உழைத்தால் இன்னும் உயர்ந்து வளரும், வளர வேண்டுமெனறு தம் உரையைத் தொடங்கித்தொல்காப்பியத்துள் 'பா' என்பது ஓசை வழியாகத் தொலைவிலிருப்பினும் அறியக்கூடிய ஒலி நயம் ஆகும். 'செய்யுள்' என்பது சொற்களை அடுக்கி ஒலி நயம் இன்றிக் கட்டடமாய்க் கட்டுவதாகும் என்றும் யாப்பியல்பற்றிக் கூறினர்கள்.

திருமதி இந்திரா குமரன்: "இலக்கிய இன்பம்" என்னும் பொருள்பற்றிப் பேசுங்கால் (Literature is an expression of Life-Spontanious overflow of powerful feelings" என்பர் பேஹட்டார்) இலக்கு+இயம்—வாழ்வின் குறிக்கோளை இயம்புவது என்று நாம் கருதலாமென்றும், நல்ல குறுந்தொகையில் ஓர் இல்லத் தலைவி தன் கணவற்கு உணவு சமைத்தளிக்க அதனை அவன் இனிது என உண்ணும் காட்சியைக் கூறி, அது மனைத்தக்க மாண்பினைப் பனைத் துணையாய்க் காட்டுகின்றதென்றும், திருக்குறளில் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்' என்ற குறளில் மனிதனும் தெய்வமாகலாம்' என்ற இயக்கு இயம்பப்படுகிறது என்றும், சீவக சிந்தாமணியில் "காய்மாண்ட தெங்கின் பழம் வீழ" என வரும் பாடலில் முக்கனியும் பெற்று தக்கவாறு விளைவது அவ் ஏமாங்கதம் என்று "இசையால் திசை போய நாடு" என்று காட்டுகின்ற நயமும், கம்ப ராமாயணத்தில், "இன்று போய்ப் போர்க்கு நாளை வா" என்ற வரியிலும். 'வீரமும் களத்தே போட்டு' என்ற வரியிலும் 'மும்மடங்கு பொலிந்த முகம்' என்ற வரியிலும் முறையே இராமன், இராவணன் பெருவீரமும், மானப்பெருமித உணர்வும் ஒருசேரப் பேசப்படுகின்றன என்னும் நயம் விளக்க எடுத்துக் கூறினர்கள்.

திருமிகு. இராமையன் அவர்கள் "கவிதை மரபு" என்ற தலைப்பில் முரசு கட்டிலில் இருந்த முடமோசியார்க்கு அரசன் கவரி வீச 'அதூஉம் சாலும் தமிழ் முழுதுணார்தல் எனற நிகழ்ச்சியைச் சுட்டி "காலம் தோறும் தமிழை உணர்வார்தான் அதனை வளர்த்து வந்தார்கள்" என்று கூறினர். மேலும் சேரனைப் பழித்தாலும் மூவரையும் பழித்ததாகக் கொண்ட செங்குட்டுவன் பண்பு 'தமிழ் இன உணர்வுக்குத் தலைமைப் பண் பென்றும், நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமிழ் மரபினைப் பக்தி உணர்வோடு காத்தார்கள் என்றும், கங்கையைப் பார்த்த போது காவிரி நினைப்பும் — மங்கை சீதையைக் கண்டபோது" விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும் 'தமிழ் நங்கை நினைப்பும்" கம்பனுக்கு வந்தன என்றால் அவன் காத்த தமிழ் நாகரிகக் கவிதை மரபு உன்னவேண்டும் என்றும், ஜானகி விபீஷணனைச் சானகி, வீடணன் என்று அமைத்து வடமொழி வெள்ளத்துக்குத் தமிழால் அணை கட்டிய கம்பன மொழிப் பற்றையும் விளக்கினர்கள். மேலும் தமிழிசைக்கு உயிரூட்டித் தண்டமிழ் காத்த செட்டி நாட்டு அரசரின் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போல் சென்னையைத் திரு. வி. க. பல்கலைக் கழகம் என்றும், மதுரையை மறைமலையடிகள் பல்கலைக் கழகம் என்றும் பேரிட்டழைக்கலாம் என்று கூறினர்கள்.

தலைவர் முடிவுரையில் "செழுமலர்க் கொடிகள் என்னும் கைகள் வா வா என்று அழைத்தன" என்று கம்பனும். 'ஆரெயில் நெடுங் கொடிவாரல் என்பன போல் மறித்துக் கை காட்ட' என்று இளங்கோவும் காட்டியதில் முன்னதில் ஓரறிவுக் கொடியும் பின்னதில் அஃதிலா மீன் கொடியும் வைத்துள்ள நுண்மை கண்டு இன்புறல் வேண்டுமென்றும் மொத்தத்தில தமிழ்க் கவிதை மரபு சிறந்ததொரு தனி மரபாகும் என்றும் கூறினர்.

சொற்பொழிவுகள் முடிவுற்றதும் புலவர் தனலட்சுமி அவர்கள் நன்றி கூறினர்கள். பின்னர் இராதாகிருட்டின தொடக்கப் பள்ளி மாணவ மாணவியர் பங்குபெற்ற கலை நிகழ்ச்சிகளும், "புதுமைப் புரட்சி" என்னும் நாடகமும் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர் நடித்த "வள்ளுவர்" என்னும் நாடகமும் உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர் நடித்த "சோழன் விசயாலயன்" என்னும் நாடகமும் நடைபெற்றன.

பேரறிஞர் அண்ணு பிறந்தநாள் விழா.

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகச் சார்பில் பேரறிஞர் அண்ணு பிறந்த நாள் விழா, சங்கத் தமிழ்ப் பெரு மன்றத்தில் திருவள்ளுவராண்டு 2004, புரட்டாசித் திங்கள் 8 ஆம் நாள் (24—9—73) திங்கட்கிழமை பிற்பகல் 5 மணி யளவில் சிறப்புற நடைபெற்றது. விழாவுக்குக் கல்லூரித் தொடர்பாளர் திருமிகு. ச. சுந்தரம், பி ஏ. பி எல் அவர்கள் தலைமையேற்ருர்கள். கல்லூரி மாணவியர் கடவுள் வாழ்த்தும் தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடினர். கல்லூரி முதல்வர் அவர்கள் விழாத் தலைவர்க்கும் சிறப்புச் சொற்பொழிவாளர்க்கும் விழா வுக்கு வந்திருந்தோர்க்கும் வரவேற்புக் கூறினர்கள். செயலாளர் மு. பாண்டுரங்கன் அறிக்கை படித்தார். தலைவர் அவர்கள் முன்னுரைக்குப் பின், ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினரும், திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்பாளருமாகிய திருமிகு. எல். கணேசன், பி ஏ. பி. எல்., எம். எல். ஏ. அவர் கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுங்கால்,

பேரறிஞர் அண்ணு அவர்கள் ஒரு கட்சித் தலைவராக மட்டுமன்றி உலகெங்குமுள்ள தமிழினம் முழுமைக்கும் தலைவ ராக விளங்கியவர்கள் ஆவர். தமிழைக் காப்பதற்காக மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கி நடத்திய அண்ணு அவர்களின் பெருந்தொண்டு காரணமாக ஐந்தாம் வகுப்புப் படித்தவர்கள் கூட "உடல் மண்ணுக்கு; உயிர் தமிழுக்கு" என்று சொல்லித் தீக்குளித்தார்கள். இருபதாம் நூற்றுண்டில் தமிழ் உரை நடையில் புதியதொரு மாற்றம் நிகழக் காரண மாக விளங்கிய அண்ணு அவர்கள் "மாற்ருன் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு. என்று சொல்லி, அரசியலில் தம்மோடு கருத்து மாறுபாடு கொண்டு விளங்கிய கவிஞர் கண்ணதாசன் அவர்களது கவிதைகளைப் பெரிதும் புகழ்ந்து கூறினர்கள் பல நூருயிரம் இளைஞர்கள் தம்மைப் பின்பற்றி எழுதவும் பேசவும் காரணமாக விளங்கிய அண்ணு அவர்கள் தமிழருக்குள்ள தனிப் பண்புகளும் தமிழர் நாகரிகமும் காப் பாற்றப்பட வேண்டுமென்றும். அதற்காக மாநிலங்களுக்கு சுயா ஆட்சி வழங்கப்பட வேண்டுமென்றும் கூறி வந்தார்கள். அவர்கள் கூறிய வழி நின்று தமிழ் வளரவும், தமிழர் பெருமை பெறவும் பாடு படுவோம்" என்று கூறினர்கள். பின்னர் வெ. சரசுவதி நன்றி கூற நாட்டு வாழ்த்துப் பாடப் பெற்று விழா இனிதே முடிவுற்றது.

கையறு நிலை

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களுள் ஒன்ருகிய உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளியில் 1960 - ஆம் யாண்டு முதல் 1966 - ஆம் யாண்டுவரை தலைமை யாசிரியராகப் பணியாற்றித் தன்னேரிலாத தொண்டு செய்த திருவாளர் சாமி. பஞ்சநதம் பிள்ளை எம் ஏ., எல் டி., அவர்கள், காந்தியார் பிறந்த நாளன்று (2—10—73) ஆடும் பெருமான் அடியிணைகள் அடைந்தார்கள் என்ற செய்திகேட்டு மிகவும் வருந்துகின்ருேம். தாம் பணியாற்றிய ஏழாண்டுகளிலும் பள்ளியின் முன்னேற்றம் பற்றியும், சங்கத்தின் முன்னேற்றம் பற்றியும் இடையருமல் எண்ணி நாடகத்தின் மூலமும் நன்கொடைகள் மூலமும் பொருள் பெற்றுச் செயலாற்றிச் சங்கச் சான்ருேருள் ஒருவராய் விளங்கினுர்கள் என்பதைச் சங்க அன்பர்கள் நன்கறிவார்கள் அன்றியும் 1966- ஆம் யாண்டு உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளியின் வெள்ளி விழாவைச் சீரோடும் சிறப்போடும் கொண்டாடி, அதன் நினைவாக அருமையும் பெருமையுமிக்க "வெள்ளிவிழா மலர்" ஒன்றையும் வெளியிட்டுப் பள்ளியின் பெருமையைப் பாரறியச் செய்தார்கள். 'உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி' எனப் பெயர் பெற்ற மேனிலைக் கட்டிடமும், சங்கக் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ மாணவரின் குடிநீர் வசதிக்காகக் கட்டபெற்ற "நீரேற்று நிலையமும்" வெள்ளிவிழா நினைவாகத் தோற்றம் பெறச் செய்தார்கள்.

இத்தகு சிறப்புடைய சான்ருேரை இழந்து வருந்தும் அவரது துணைவியார்க்கும் பிள்ளைகளுக்கும் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.